## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## ஏழாம் பத்து

### ஆறாம் திருவாய்மொழி - பாமரு மூவுலகும்
### எம்பெருமானது குணம் அழகு முதலியவற்றை மனத்தால் அநுபவித்து, அவனை நேரில் கண்டு அநுபவிக்க ஆசைப்பட்டு ஆழ்வார் மனமுருகிக் கூப்பிடுதல்

** பா மரு மூவுலகும் படைத்த *
பற்பநாபாவோ? *
பா மரு மூவுலகும் அளந்த *
பற்ப பாதாவோ? **
தாமரைக் கண்ணாவோ! * தனியேன்
தனி ஆளாவோ! *
தாமரைக் கையாவோ! * உன்னை
என்று கொல் சேர்வதுவே? 1

என்று கொல் சேர்வது? அந்தோ! * அரன்
நான்முகன் ஏத்தும் * செய்ய
நின் திருப் பாதத்தை யான் * நிலம்
நீர் எரி கால் ** விண் உயிர்
என்ற இவை தாம் முதலா * முற்றுமாய்
நின்ற எந்தாயோ! *
குன்று எடுத்து ஆநிரை மேய்த்து * அவை
காத்த எம் கூத்தாவோ! 2

காத்த எம் கூத்தாவோ! * மலை ஏந்திக்
கல் மாரி தன்னை *
பூத் தண்துழாய் முடியாய்! * புனை
கொன்றை அஞ்செஞ்சடையாய்! **
வாய்த்த என் நான்முகனே! * வந்து என்
ஆர் உயிர் நீ ஆனால் *
ஏத்தரும் கீர்த்தியினாய்! * உன்னை
எங்குத் தலைப்பெய்வனே? 3

எங்குத் தலைப்பெய்வன் நான்? * எழில்
மூவுலகும் நீயே *
அங்கு உயர் முக்கண் பிரான் *
பிரம பெருமான் அவன் நீ **
வெங்கதிர் வச்சிரக் கை *
இந்திரன் முதலாத் தெய்வம் நீ *
கொங்கு அலர் தண் அந்துழாய் முடி *
என்னுடைக் கோவலனே! 4

என்னுடைக் கோவலனே! * என்
பொல்லாக் கரு மாணிக்கமே! *
உன்னுடை உந்தி மலர் * உலகம்
அவை மூன்றும் பரந்து **
உன்னுடைச் சோதி வெள்ளத்து அகம்பால் *
உன்னைக் கண்டு கொண்டிட்டு *
என்னுடை ஆருயிரார் * எங்ஙனே
கொல் வந்து எய்துவரே? 5

வந்து எய்தும் ஆறு அறியேன் * மல்கு
நீலச் சுடர் தழைப்ப *
செஞ்சுடர்ச் சோதிகள் பூத்து * ஒரு
மாணிக்கம் சேர்வது போல் **
அந்தர மேல் செம்பட்டோடு * அடி
உந்தி கை மார்வு கண் வாய் *
செஞ்சுடர்ச் சோதி விட உறை *
என் திருமார்பனையே 6

என் திருமார்பன் தன்னை * என்
மலை மகள் கூறன் தன்னை *
என்றும் என் நா மகளை * அகம்பால்
கொண்ட நான்முகனை *
நின்ற சசீ பதியை * நிலம்
கீண்டு எயில் மூன்று எரித்த *
வென்று புலம் துரந்த *
விசும்பு ஆளியைக் காணேனோ! 7

ஆளியைக் காண்பரியாய் * அரி காண்
நரியாய் * அரக்கர்
ஊளையிட்டு அன்று இலங்கை கடந்து *
பிலம் புக்கு ஒளிப்ப **
மீளி அம்புள்ளைக் கடாய் * விறல்
மாலியைக் கொன்று * பின்னும்
ஆள் உயர் குன்றங்கள் செய்து *
அடர்த்தானையும் காண்டுங்கொலோ? 8

காண்டுங்கொலோ? நெஞ்சமே! * கடிய
வினையே முயலும் *
ஆண்டிறல் மீளி மொய்ம்பின் *
அரக்கன் குலத்தைத் தடிந்து **
மீண்டும் அவன் தம்பிக்கே *
விரி நீர் இலங்கை அருளி *
ஆண்டு தன் சோதி புக்க *
அமரர் அரி ஏற்றினையே 9

ஏற்றரும் வைகுந்தத்தை * அருளும்
நமக்கு * ஆயர் குலத்து
ஈற்றிளம் பிள்ளை ஒன்றாய்ப் புக்கு *
மாயங்களே இயற்றி **
கூற்றியல் கஞ்சனைக் கொன்று * ஐவர்க்காய்க்
கொடுஞ்சேனை தடிந்து *
ஆற்றல் மிக்கான் * பெரிய
பரஞ்சோதி புக்க அரியே 10

** புக்க அரி உருவாய் * அவுணன்
உடல் கீண்டு உகந்த *
சக்கரச் செல்வன் தன்னைக் *
குருகூர்ச் சடகோபன் சொன்ன **
மிக்க ஓர் ஆயிரத்துள் * இவை
பத்தும் வல்லார் அவரை *
தொக்குப் பல்லாண்டு இசைத்துக் *
கவரி செய்வர் ஏழையரே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---